**சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டுக் கொள்கைகள் நியம இல. 03 இன் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் கொள்கை மாற்றப்பட்டால், அது வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று முன்னைய ஆண்டில் நேரடி முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நேரடி முறையைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரித்தலானது பயனர்களுக்கு மிகவும் பொருத்தமான மற்றும் சரியான தகவலை வழங்குகிறது, ஏனெனில் நிதியானது | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றை வழங்குதல் நேரடி முறையிலிருந்து நேரில் முறைக்கு மாற்றப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் நேரில் முறை மீண்டும் பயன்படுத்தப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். |

செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்காததுடன் நிதி சேகரிப்பு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடையே அவற்றை வழங்குதல் மாத்திரமே காணப்பட்டது. இது தவிர்க்கப்பட்டு நேரடி முறையைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (i) | பெற வேண்டிய கணக்குகள் - இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | 470,884 | 703,607 | 232,723 | ரூபா 703,607 கூட்டுமொத்த நிதியத்தின் நாளாந்த சேகரிப்பு தவறுதலாக அதிகாரசபையின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ரூபா 470,844.00 மாத்திரமே அதிகாரசபையிலிருந்து பெறவேண்டியதாக நிதியத்தால் இனங்காணப்பட்டிருந்தது. எனினும், இந்த மொத்தத் தொகையும் நிதியத்திற்கு பெறப்பட வேண்டும் என பின்னர் இனங்காணப்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செலுத்த வேண்டிய கணக்குகள் - இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | 4,732,903 | 2,803,815 | 1,929,088 | பதில் வழங்கப்படவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க | சேவைக் கட்டணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா | இலங்கை சிவில் விமானப் | சட்டத்தின் ஏற்பாடுகளுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றுலாத்துறை சட்டத்தின் iii ஆம் அத்தியாயம் | 12,409,698 அல்லது 2.5 சதவீத கழித்தல் தொடர்பாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | போக்குவரத்து அதிகாரசபையினால் எமக்கு வழங்கப்பட்ட 2009 சனவரி 29 ஆம் திகதிய PF/R/4/019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இந்த சேவைக் கட்டணத்தில் 2.5% ஐ குறைப்பதற்கு பொது திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. | இணங்குதல் அவசியமானதாகும். |
| (i) | 23 (2) (அ) பிரிவு | குடியகல்வு வரியின் 1/3 தொடர்பாக மீளாய்வாண்டில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டது. | | |
| (ii) | 24 (3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகள் இப் பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ரூபா 3,656,520 நிர்வாகச் செலவினங்கள் மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தை திருத்திய பின்னர் இதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றுலா அபிவிருத்தி வரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் I ஆம் பகுதியின் (3) ஆம் பிரிவு | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 0.5 சதவீத விலைவிகிதத்தில் அறவிடப்பட்ட வரியானது வரி அறவிடப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட வேணடிய போதிலும் 2020 ஆம் ஆண்டும் 2021 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் நவம்பர் வரையும் இவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 7,591,174 தொகையான வரி 2022 பெப்ரவரி 02 இல் அறவிடப்பட்ட | 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக நாடு அவ்வப்போது பூட்டப்பட்டமை மற்றும் உத்தியோகத்தர்களை வேலைக்கு அழைப்பதில் எதிர்கொள்ளப்பட்ட சிரமங்கள் காரணமாக சேகரிக்கப்பட்ட பணத்தை வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டது. எனினும், 2021 சனவரி முதல் திசெம்பர் வரை 0.5 சதவீத விலைவிகிதத்தில் அறவிடப்பட்ட வரி 2022/02/02 ஆம் திகதிய இலங்கை வங்கி காசோலை இல. 191119 மூலம் | சட்டத்தை பின்பற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படாமல் அனுப்பப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 1,313,694,142 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 1,037,291,031 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானத்தில் ரூபா 276,403,111 தொகையான முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி மற்றும் குடியகல்வு வரி என்பன ரூபா 271,798,009 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 4,605,102 ஆல் அதிகரித்தமை என்பன மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 115,403,635 தொகை வங்கிக்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை முறையாகக் கண்டறிந்து பின்னர் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்டிருந்தது. | எனவே சில வரி செலுத்துவோர் கொடுப்பனவுகளிற்காக ஒன்லைன் முறை மற்றும் பண வைப்பு இயந்திரங்களை பயன்படுத்தும் போது அவாகளது கொடுப்பனவுகளின் விபரங்களை குறிப்பிட்டிருக்கவில்லை, இதனால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் (நாடு பூட்டப்பட்டிருந்த காலத்தில்) இனங்காணப்படாத பணம் படிப்படியாக அதிகரித்திருந்தது.<br><br>இவ் விடயத்தை தீர்ப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, இலத்திரனியல் அஞ்சல்கள் மூலம் அனைத்து நிறுவனங்களுக்கும் இனங்காணப்படாத பணப் பட்டியலை அனுப்பியுள்ளோம், மேலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு பட்டியலில் இடம் பெற்றிருந்தால், ஒவ்வொரு நிறுவனமும் அதற்கான பண வைப்பு சீட்டை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. எனினும், அவர்களில் சிலர் ஆவணங்கள் தவறவிடப்பட்டமை தொடர்பாக அறிவித்திருந்தனர். மேலும், சில வணிக நிறுவனங்கள் இன்னும் மூடப்பட்டுள்ளதுடன் செயற்பாடுகள் | வங்கிக்கு நேரடியாக அனுப்பப்படும் பணத்தைத் சரியாகக் கண்டறிந்து கணக்குகளை நாளதுவரையாக்குவதற்கு முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். |

இன்னும் தொடங்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இனங்காணப்படாத வைப்புக்களின் பட்டியலை இலங்கை வங்கியின் பெருநிறுவனக் கிளைக்கு அனுப்பியதன் விளைவாக, வைப்பாளர்களின் விபரங்களை உள்ளடக்கிய நாளதுவரையாக்கப்பட்ட பட்டியல் அவர்களால் (இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை) எங்களுக்கு அனுப்பப்படும். எனவே, இப்பிரச்னைக்கு தீர்வு காண நிதிப் பிரிவு மூலம் அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.